

# உணவுக்குக் காய்கறி... மருந்துக்கு மூலிகைகள்...

## 25.11.2012





செம்பருத்தி, துளசி, மருதாணி...



சுற்றாழை, கோழிஅவரை...

**ஒரு ஏக்கரில், மாதம் ரூ.30,000**

விவசாயத்தோடு... அதுசார்ந்த உபதொழில்களையும் சேர்த்து செய்தால், நிச்சயமாகப் பொருளாதார ரீதியில் பெரும் வெற்றிதான் என்பது விவசாயப் பொருளாதார வல்லுநர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கருத்து! இதைச் சரியாகப் புரிந்து கொண்ட பலரும் ஆடு, மாடு, கோழி, பட்டுப்புழு.. என வளர்த்து கூடுதல் லாபம் ஈட்டி வருகிறார்கள். நானும் அவர்களின் ஒருவன் என்று கூறுகிறார் வெண்பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்து சிறந்த வருமானம் பார்த்து வரும், திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், குண்டடம் காசிலிங்கம்பாளையம் பகுதியைச் சேர்ந்த செல்லமுத்து. இதற்காக இவரைப் பாராட்டி, 2011 மற்றும் 2012 –ம் ஆண்டிற்கான மாநில அளவிலான சிறந்தப் பட்டுக்கூடு உற்பத்தியாளர் என்கிற விருதை கொடுத்திருக்கிறது தமிழக அரசின் பட்டு வளர்ச்சித் துறை! வழிகாட்டிய மனைவி

வீடு தேடிச் சென்ற போது, பளீர் வெண்மையில் மின்னிக் கொண்டிருந்த பட்டுக்கூடுகளைச் (கக்கூன்) சேகரித்துக் கொண்டிருந்த செல்லமுத்து, வெங்காயம், மிளகாய், மக்காச்சோளம் என்று வெள்ளாமை செய்து கொண்டிருந்தேன். அதில் நிரந்தர வருமானம் கிடைக்கவில்லை. லிட்டர், லிட்டராக பூச்சிக்கொல்லியும் மூட்டை, மூட்டையாக உரத்தையும் வாங்கிப் போட்டு, கடனாளி ஆனதுதான் மிச்சம். ஆனால், விவசாயத்தை விட்டால் எனக்கு வேறு தொழிலும் தெரியாது. இந்த நிலையில் எனக்கு கல்யாணமும் ஆயிடுச்சு. மனைவி பாப்பாத்தியோட ஊர் நிறையூர், அங்கு கிட்டத்தட்ட எல்லா விவசாயிகளுமே பட்டுக்கூடு உற்பத்தி செய்துக்கிட்டிருந்தாங்க. என் மனைவி வீட்டிலும் பட்டுக்கூடு உற்பத்திதான். அதனால், அதைப்பற்றிய நெளிவு, சுளிவு அத்தனையும்

அவங்களுக்குத் தெரிந்திருந்தது. கல்யாணமாகி வந்ததுமே, பாப்பாத்தியோட சேர்ந்து நானும் பட்டுப்புழு வளர்க்க ஆரம்பித்தேன்.

**செழிப்பு தரும் பட்டுப்புழு!**

89-ம் வருடத்திலிருந்து பட்டுப்புழு வளர்த்துக் கொண்டிருக்கிறோம். மல்பெரிச் செடிகளை நடவு செய்துவிட்டு, வீட்டின் ஒரு பகுதியையே பட்டுப்புழு வளர்ப்பு மனையாக மாற்றிவிட்டோம். நான் இரண்டு முறை சிறந்த பட்டு விவசாயிக்கான மாநில விருது வாங்கியிருக்கேன் என்றால்... அதற்கு என் மனைவியுடைய உழைப்பும், தொழில்நுட்ப அறிவும்தான் காரணம். என்னுடைய இரண்டு பசங்களையும் நல்ல இன்ஜினீயரிங் கல்லூரியில் சேர்த்திருக்கிறேன். இந்த அளவிற்கு நான் செழிப்பாக இருப்பதற்கு காரணம், பட்டுப்புழு வளர்ப்புதான் என்றார். சுலபமாக வளர்க்கலாம்!

ஆரம்பத்தில் மஞ்சள் நிறக் கூடுகளைத்தான் உற்பத்தி செய்தோம். அதைவிட வெள்ளைக் கூடுகளுக்கு அதிக விலை கிடைப்பதால்... ஆறு வருடமாக வெள்ளைக் கூடுதான் உற்பத்தி செய்கிறோம். விவசாயம் சார்ந்தத் தொழில்களில் குறைந்த நாள்களிலே வருமானம் தரக்கூடியது, பட்டுக்கூடு உற்பத்திதான். ஆனால், பட்டு வளர்ச்சிதுறைக்காரர்கள் சொல்லித் தரும் தொழில்நுட்பத்தை சரியாகக் கடைபிடித்து, நல்ல தரமான கூடுகளை உற்பத்தி செய்தால்தான் லாபம் சம்பாதிக்க முடியும். முன்பெல்லாம், ஒரு நாளைக்கு ஐந்து வேளைக்கு இலைகளைப் பொடிபொடியாக நறுக்கி புழுக்களுக்குக் கொடுக்க வேண்டும். அதனால், நாள் முழுக்க வேலை பார்க்க வேண்டியிருக்கும். இப்போது, எளிமையான உபகரணங்கள் வந்துவிட்டதால், வேலை குறைந்துவிட்டது. இப்போது வளர்ப்பு முறைகளும் மாறிவிட்டது. அதனால், வீட்டு வேலை, மற்ற விவசாய வேலை எல்லாவற்றையும் பார்த்துகொண்டே பட்டுப்புழுவையும் வளர்த்துவிடலாம் என்றார்.

**ஒரு ஏக்கரில் மல்பெரி... 100 கிலோ கூடு உற்பத்தி!**

ஒரு ஏக்கர் நிலத்துக்கு 10 டிராக்டர் தொழுவுரம் 5 டன் கோழி எரு ஆகியவற்றைக் கொட்டி இறைத்து, நன்றாக உழவு செய்ய வேண்டும். 3 அடி இடைவெளியில் பார் அமைத்து, அதில் 5 அடி இடைவெளியில் மல்பெரிச் செடிகளை நடவு செய்ய வேண்டும். பட்டு வளர்ச்சித்துறை மூலமாக மானிய விலையில் நாற்றுகள் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு அதிகபட்சம் 4 ஆயிரத்து 800 செடிகளை நடவு செய்ய முடியும். நடவு செய்த பிறகு சொட்டுநீர்ப் பாசனம் அமைத்து வாரம் ஒரு முறை பாசனம் செய்ய வேண்டும். சொட்டுநீர் அமைக்கவும் மானியம் உண்டு. களை மற்றும் பயிர் பராமரிப்பு முறைகளை சரியாக மேற்கொண்டு வந்தால், நடவு செய்த 90-ம் நாளில், செடிகள் ஆளுயரத்திற்கு வளர்ந்துவிடும். இந்தச் செடிகளில் 20 ஆண்டுகள் வரை தொடர்ந்து மகசூல் எடுக்கலாம். 25 நாட்களுக்கு ஒரு முறை இலைகளைப் பறிக்கலாம். நிலத்தைப் பாதியாகப் பிரித்துக் கொண்டு சுழற்சி முறையில் அறுவடை செய்தால், தொடர்ந்து ஆண்டு முழுவதும் இலைகள் கிடைத்துக் கொண்டே இருக்கும். பட்டுப்புழுக்களுக்கு முக்கியத் தீவனம் மல்பெரி இலைகள்தான் என்பதால், இவை தரமாக

இருந்தால்தான் புழுக்களும் ஊக்கமுடன் வளர்ந்து, அதிக எடையுள்ள கூடுகளை உற்பத்தி செய்யும். 100 முட்டைத் தொகுதிகளில் உருவாகும் புழுக்களுக்கு, மொத்தம் 700 கிலோ அளவிற்கு இலை தேவை. இதற்கு, ஒரு ஏக்கர் நிலத்தில் மல்பெரி வளர்க்க வேண்டும். 100 முட்டைத் தொகுதிகள் மூலம் மாதம் 100 கிலோ பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்ய முடியும்.

**தட்பவெப்பம்... கவனம்!**

தீவனம் தயாரான பிறகு நமக்குத் தேவையான அளவில் முட்டைத் தொகுதிகளை பட்டு வளர்ச்சித்துறை அலுவலகத்தில், வாங்கி அடை வைக்க வேண்டும். அடை வைக்கும் இடத்திற்கு ' இளம் புழு வளர்ப்பு மனை' என்று பெயர். மனையைச் சுற்றிலும் கொசு வலை அடித்து தென்னங்கீற்று வேய்ந்து, மனைக்குள் தட்பவெப்பம் சீராக இருக்கும் படி பார்த்துக் கொள்ள வேண்டும். முட்டை பொரித்து வெளிவரும் புழுக்களை, 8-ம் நாள் வரை இளம்புழு வளர்ப்பு மனையில் வைத்துப் பராமரிக்க வேண்டும். தினமும் காலையிலும், மாலையிலும் இளம் வயது செடிகளில் உள்ள கொழுந்து இலைகளைப் பறித்து உணவாக வைக்க வேண்டும். முதல் எட்டு நாட்களுக்கு இளம்புழுக்களுக்குத் தனிக்கவனம் தேவை. அவ்வளவு நுணுக்கமாக, பார்க்க ஆள் வசதி இல்லையென்றால், 'சாக்கி சென்டர்' என்ற அழைக்கப்படும் இளம்புழு வளர்ப்பு மையங்களிலிருந்து எட்டு நாட்கள் வயதுடைய புழுக்களை வாங்கி வந்து வளர்க்கலாம். (இவர், தற்போது இளம்புழுக்களை வாங்கி வந்துதான் வளர்க்கிறார்.)
8 நாட்கள் வயதுடைய புழுக்களை அதற்கென்றே பிரத்யேகமாக தயாரிக்கப்பட்டிருக்கும் புழு வளர்ப்பு தாங்கிகளில்விட வேண்டும். கட்டில் போல் இருக்கும் இந்தத் தாங்கிகளில் 'நெட்ரிக்கா' எனும் பிளாஸ்டிக் விரிப்பை விரிக்க வேண்டும். இந்த விரிப்பில் நூற்றுக்கணக்கான அறைகள் இருக்கும். அவற்றின் மூலமாகத்தான், பட்டுபுழுக்கள் தன்னைச் சுற்றி கூடுகளைக் கட்டும். வளரும் புழுக்களுக்கு தினமும் காலையிலும், மாலையிலும்.. ஒரு மாத வயதிற்கு மேல் உள்ள செடிகளிலிருந்து முற்றிய இலைகளைக் காம்புடன் பறித்து உணவாக வைக்க வேண்டும். புழுக்கள், இலைகளை மட்டும் சாப்பிட்டுவிட்டு, காம்புகளை ஒதுக்கி விடும். பிறகு, காம்புகளை அப்புறப்படுத்த வேண்டும். புழுக்கள் 27 நாட்கள் வயதில், கூடுகளை உருவாக்கிக் கொள்ளும். இதுதான் அறுவடை தருணம். அறுவடை முடிந்த பிறகு, வளர்ப்பு மனை மற்றும் தளவாடங்கள் சுத்தம் செய்து, பிளீச்சிங் பவுடர் போட்டுக் கழுவி, அடுத்தத் தொகுதியை வளர்க்க ஆரம்பிக்க வேண்டும்.

**ஒரு ஏக்கர்... இரண்டு ஆட்கள்... மாதம் 30 ஆயிரம்!**

100 கிலோ பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்வதற்கு இரண்டு வேலை ஆட்களே போதும். நல்ல தண்ணீர், ஒரு ஏக்கர் நிலம் இருந்தால்... கணவன், மனைவி இரண்டு பேரும் வேலை செய்தாலே.. மாதம் 100 கிலோ கூடு உற்பத்தி செய்து முப்பதாயிரம் ரூபாய் வரைக்கும் சம்பாதித்துவிட முடியும். நான் இரண்டு ஏக்கரில் மல்பெரி சாகுபடி செய்கிறேன். மாதம் 200 கிலோ கூடு உற்பத்தி

செய்வதால், குறைந்தபட்சமாக 60 ஆயிரம் ரூபாய் வரைக்கும் வருமானம் பார்க்கிறேன். நான் கோயம்பத்தூரில் இருக்கும் பட்டுக்கூடு விற்பனை அங்காடியில்தான் விற்கிறேன். இங்கே லீவு நாட்கள் தவிர எல்லா நாட்களிலும் ஏலம் நடக்கும். இப்போது இரண்டு வருடமாக ஒரு கிலோ பட்டுக்கூடு 300 ரூபாய்க்கு குறையாமல் ஏலம் போயிட்டிருப்பதால் நல்ல வருமானம் கிடைக்கிறது என்றார்.

**மானியங்களை அள்ளி வழங்குகிறது மத்திய அரசு!**

ஈரோடு மண்டல பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் பக்கிரிசாமியை சந்தித்த போது, பட்டுப்புழு வளர்ப்பு பற்றிய சில விவரங்களை நம்மிடம் பகிர்ந்து கொண்டார். இந்தியாவில் பட்டு நூல் தேவை அதிகளவில் உள்ளது. இந்தியாவிற்கு ஆண்டிற்கு 29 ஆயிரம் மெட்ரிக் டன் கச்சாப்பட்டு தேவை. ஆனால், இங்கு 20 ஆயிரம் மெட்ரிக் டன் மட்டும்தான் உற்பத்தியாகிறது. அதனால், தமிழகத்தில் பட்டுக்கூடு உற்பத்தி நல்ல வருமானம் தரக்கூடிய தொழிலாக இருக்கிறது. இந்திய அளவில், நான்கு ஆண்டுகளாக வெண்பட்டு உற்பத்தியில் தமிழகம்தான் முதலிடத்தில் உள்ளது. இத்தொழிலுக்கு மத்திய – மாநில அரசுகள் மானியத்தை அள்ளி வழங்குகின்றன. நாற்று, நடவு, இலைப்பறிப்புக் கருவி, விசைத்தெளிப்பான், பட்டு வளர்ப்பு மனை, மற்றும் தளவாடங்கள், சொட்டுநீர் அமைப்பு என்று அனைத்திற்கும் 75% வரை மானியம் உண்டு. சிறு – குறு விவசாயிகளுக்கு 100% மானியத்தில் சொட்டுநீர் வசதியும் செய்து தரப்படுகிறது. வங்கிக்கடன் வசதியோடு, இயற்கைச் சீற்றங்கள், நோய்கள் போன்றவற்றில் ஏற்படும் திடீர் இழப்பை ஈடுசெய்ய, காப்பீடு வசதியும் உண்டு. மல்பெரி வயல் வரப்புகளில் மரக்கன்றுகள் நடவும் மானியம் உண்டு என்றார் பக்கிரிசாமி.

**தொடர்புக்கு**
**செல்லமுத்து. செல்போன்: 96007 -95002**
**பி.முத்தையா, செல்போன்:73735-252252இ**
**உதவி இயக்குநர், ஈரோடு, தொலைபேசி: 0424 – 2339664**
**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.11.12 www.vikatan.com**